DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW12 |
| Name | : | கணேஷ்குமார் |
| Father's Name | : | முனுசாமி |
| Village | : | தேன்கனிக்கோட்டை |
| Taluk | : | தேன்கனிக்கோட்டை |
| District | : | Krishnagiri |
| Profession | : | Inspector of Police |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 26th day of November 2025.

எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது தேன்கனிக்கோட்டை காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அதற்கு முன்பாக 09.11.2019 ஆம்தேதி மகாராஜா கடை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் என்பவர் நிலைய அலுவலில் இருந்த போது, கிருஷ்ணகிரி அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கிருஷ்ணன், வயது 66, த/பெ.வெங்கடேஷ் நாயுடு, போத்திநாயனப்பள்ளி என்பவரிடம் இருந்து பெற்று வந்த வாக்குமூலத்தின் பெயரில் மகாராஜா கடை காவல் நிலைய குற்ற எண்.317/2019, சட்டப்பிரிவுகள் 394 இதச வாக பதிவு செய்யப்பட்ட வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே காலை 09.45 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான வேப்பனப்பள்ளி – மகாராஜா கடை ரோட்டில் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அடுத்து உள்ள சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகள் வெங்கடேசன், ராமமூர்த்தி ஆகியோர் முன்பாக பார்வை மகசர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம்

**அ.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு மருத்துவமனை சிகிச்சையில் இருந்த வாதி கிருஷ்ணன், அவரை மருத்துவமனையில் சேர்த்த மகாதேவன்,ராஜ்குமார் ஆகியோர்களையும் கௌதம் ராஜ், ராஜசேகர், கிருஷ்ணன் ஆகியோர்களையும் மற்றும் மகசர் சாட்சிகளையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கு தொடர்பாக எதிரிகளை தேடி வந்த நிலையில் 13.11.2019 ஆம் தேதி காலை 06.30 மணிக்கு மகாராஜா கடை – கிருஷ்ணகிரி செல்லும் ரோட்டில் உள்ள ஆத்துக்கால்வாய் பிரிவு ரோட்டில் வாகன சோதனை செய்து கொண்டிருந்த போது, கிருஷ்ணகிரி பக்கம் 2 இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களை விசாரிக்க அவர்கள் 1.சேரன், வயது 21, த/பெ.ரமேஷ், பழையபேட்டை, 2.அருண்குமார், வயது 20, த/பெ.சிவக்குமார், 3.மின்சாரக்கண்ணன், வயது 20, த/பெ.கமல், 4.சுமன், வயது 20, த/பெ.சத்யா அனைவரும் பழையபேட்டை சேர்ந்தவர்கள் என கூறினார்கள். அவர்களை விசாரிக்க அனைவரும் தாங்கள் தான் குற்றத்தை செய்ததாக எவ்வித ஆசை வார்த்தையும், அச்சுறுத்தலும் இன்றி ஒப்புக்கொண்டார்கள்.

சேரன் என்பவர் தனது ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் நந்தகுமார், மகேந்திரன் ஆகியோர் முன்பாக எந்த வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் இல்லாமல் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடந்த 09.11.2019 அன்று பகல் 12.00 மணி அளவில் மகாராஜா கடை – வேப்பனப்பள்ளி செல்லும் ரோட்டில் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அருகில் வேப்பனப்பள்ளி பக்கம்இருந்து வந்த சுமார் 70 வயது மதிக்கத்தக்க அ.சா.1 கிருஷ்ணன் என்பவரை வாகனத்திலிருந்து கீழே தள்ளி தலையில் கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தி பணத்தை எடுத்துச் சென்றதாகவும் ஒப்புக் கொண்டார்கள். மேலும் அவரின் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால், நான் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அருகே ஒரு நபரை அடித்து பணம் பறித்த இடத்தை அடையாளம் காட்டியும், நான் பெரியவரை அடிக்க பயன்படுத்திய கட்டையையும், பணம் ரூ.25,000/– மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாக சொன்ன வாக்குமூலத்தை தலைமைக் காவலர் 1443 கன்னிகா என்பவரால் மடிக்கணினியில் எதிரி என்னிடம் சொல்ல சொல்ல என் மூலமாக கணினியில் தலைமைக் காவலர் மூலம் பதிவு செய்யப்பட்டது. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக, சாட்சிகள் நந்தகுமார், மகேந்திரன் ஆகியோர் முன்பாக எதிரி அருண்குமார் என்பவரிடம் விசாரித்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் யாருடைய வற்புறுத்தலும் இன்றி கொடுத்தார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால், நான் கல்யாணகுண்டு கணவாய் பஸ் ஸ்டாப் அருகே அ.சா.1யை அடித்து பணம் பறித்த இடத்தை அடையாளம் காட்டியும், அதன் தொடர்ச்சியாக டிப்பர் லாரியை நிறுத்தி டிரைவரை கீழே இறக்கி கத்தியை காட்டி மிரட்டி பணம் ரூ.15,000/– கொள்ளையடித்த இடத்தையும், அச்சம்பவத்தின் போது பயன்படுத்திய கத்தியையும், கறுப்பு கலர் vivo செல்போனையும் மறைத்து வைத்துள்ள இடத்தையும் அடையாளம் காட்டுகிறேன் என்று சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என்னால் மேற்படி தலைமைக் காவலர் கன்னிகா என்பவர் மூலம் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி ஒப்புதல் வாக்குமூலங்களில் எதிரியும், மேற்கண்ட சாட்சிகளும் கையொப்பம் இட்டனர். இந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக சாட்சிகள் முன்பாக எதிரி சுமன் என்பவரிடம் இருந்து TN 24 Q 8182 என்ற Bajaj Discover மோட்டார் சைக்கிள் 09.00 மணிக்கு மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அருண்குமார் என்பவரிடம் இருந்து TN 24 AM 1751 என்ற எண்ணுள்ள Yamaha FZ வாகனம் கைப்பற்றப்பட்டது. அதே சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றப்பட்டது. அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் தொடர்ச்சியாக, அதே சாட்சிகள் மற்றும் எதிரிகளுடன் கிருஷ்ணகிரி, பழையபேட்டை குப்பமேட்டு தெருவில் உள்ள சேரன் வீட்டில் சூட்கேசில் மறைத்து வைத்திருந்த பணம் ரூ.25,000/– (ஐந்நூறு ரூபாய் நோட்டுகள்), சுமார் 2 அடி நீளம் உள்ள மரக்கட்டை ஒன்றையும் எதிரி சேரன் எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரூ.25,000/– பணத்திற்கான புகைப்படம் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி எதிரிகளுடன் 12.30 மணிக்கு காவல் நிலையம் வந்து முறைப்படி திரேக சோதனை செய்தும், முறைப்படி பாரா காவலர் வசம் ஒப்படைக்கப்பட்டும் மருத்துவ பரிசோதனை மற்றும் உணவு கொடுத்தும் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின் படி வழிநடத்தியும்

கைப்பற்றப்பட்டதை படிவம் 91 இன் மூலம் நீதிமன்றத்திற்கு எதிரிகளுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் சாட்சியாக இருந்த நந்தகுமார், மகேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர் பிரசன்னபாலாஜி என்பவரை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றேன். அது ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகள் சேரன், சுமன், அருண்குமார், மின்சாரக்கண்ணன் ஆகியோர்களை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 394 இதசவிலிருந்து பிரிவு மாற்றம் செய்து 394 r/w 397 ஆக பிரிவு மாற்றம் செய்தேன். மேலும் சான்றுப்பொருளை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.